**மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ (“கம்பனி”) மற்றும் அதன் துனை நிறுவனங்கள - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

மேர்ச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சீ (“கம்பனி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனி மற்றும் குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழு கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் மற்றும் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வின் போது கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடு என்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளபபடுகின்ற கணக்காயவில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவது இல்லை. பிறழ் கூற்றுக்கள் ஆனவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்தில் எடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி மற்றும் குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழு தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) தற்போதுள்ள கடன் வசதிகள் முடிவுத் திகதி, குத்தகைதாரர் மற்றும் வட்டி விகிதத்தை நிறுவனம் மாற்றியுள்ளது என்பதற்கான சில நிகழ்வுகள் கண்டறியப்பட்டன. இருப்பினும், | வாடிக்கையாளரின் கோரிக்கைகயின் பேரில் வாடகை செலுத்த வேண்டிய திகதியை மாற்றுவதற்காக முதிர்வு திகதியை மாற்றியமைத்தல்.<br><br>குத்தகைதாரரை வெளிப்படையாக எந்த | மறுசீரமைக்கப்பட்ட மற்றும் மாற்றியமைக்கப்பட்ட கடன்களை தல்லியமாக கைப்பற்ற கணிணியை மேம்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | அந்த வசதிகள் நிறுவனத்தின் ஐடி அமைப்பால் மறுசீரமைக்கப்பட்டதாகவோ அல்லது மாற்றியமைக்கப்பட்ட தாகவோ கைப்பற்றப்படவில்லை. | மாற்றமும் செய்யவில்லை. இது தொடர்பாக மேலும் சரி பார்க்கப்படும். <br><br> வங்கியின் ஊழியர்கள் சேவையிலிருந்து ராஜினாமா செய்யும் போது அவர்களின் கடன் வட்டி விகிதத்தை தற்போதைய சந்தை விகிதத்துடன் சரி செய்வதற்காகவே வட்டி விகிதம் ஏற்கப்பட்டது. | பரிந்துரைக்கப்படகின்றது. |
| (ii) | 2019 டிசம்பர் 31 இல் முழுகடன் இலாகாவில் ஏழு கடன் வசதிகள் மறை நிலுவையுடனும் மேலும் 310 கடன் வசதிகளின் குறைந்தது ரூபா 1 முதல் ரூபா 10 வரையான நிலுவைகளை கொண்ட கடன்களும் காணபபட்டது. | கடன் மறை நிலுவை மற்றும் பூச்சிய நிலுவையாகவுள்ள கடன்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மறை நிலுவைகளையும் மற்றும் குறைந்த நிலுவைகளையும் அமைப்பிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கவும். |
| (iii) | ரூபா 2,375 மில்லியன் பெறுமதியான 13,379 கடன் வசதிகள் செயற்படாத கடன்களாக கணினி அமைப்பில் கொடியிடப்பட்ட போதிலும் இவர்களுக்கு எதிராக வங்கி எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. | ஆவணத்தில் பல குறைபாடுகள் இருப்பதன் காரணமாக இது தாமதமானது. | செயல்படாத கடன் வசதி வாடிக்கையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (iv) | பூச்சிய பெறுமதியான எழுபது கடன் வழங்கள்கள் உருவாக்கப்படடு கடன் இலாகாவில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நிதி இதுவரை அடிப்படையாளருக்கு வழங்கப்படவில்லை எழுபது வசதிகளில் முப்பது வசதிகள் 2019 நவம்பர் மற்றும் டிசெம்பர் காலங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. | இந்த எழுபது கடன்களில் 04 குத்தகை கடன்கள் மற்றவை ஈட்டுக் கடன்களாக இருந்தன. <br> மூன்று குத்தகை வசதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை மூடப்பட்டன. பூச்சிய மீதியை கொண்டுள்ள ஈட்டுக் கடன் வசதிகள் கடன் இலாகாவிலிருந்து நீக்கப்பட்டன. | பூச்சிய நிதி விநியோக கடன்களை அமைப்பிலிருந்து நீங்க பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (v) | சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் 213 கடன் வசதிகள் செயல்படாத கடன்களாக அமைப்பில் கொடியிடப்படவில்லை. | பொதுவாக கடன் வசதி அமைப்பு வழியாக சட்ட நடவடிக்கைக்கு மாற்றப்படும் போது அது சட்டம் என கொடியிடப்படும். இருப்பினும் சட்டதுணை அமைப்பு மற்றும் கையொப்ப அமைப்பு விபரங்களின் ஒப்பீடு மற்றும் பகுப்பாய்வுக்காக தவறான அறிக்கை தேர்ந்தெடுக்கப்பட்டால், பகுப்பாய்வு மாறும் மற்றும் இது தொடர்பில் மேலும் பகுப்பாய்வு செய்வோம். | செயற்படாத கடன் வாடிக்கையாளர்களை கொடியிட கணினி அமைப்பை மேம்படுத்த பரிந்துரைக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | குறிப்பிட்ட சபைக் குறிப்பின் படி மூடப்பட்ட இரண்டு வங்கிக் கணக்குகள் பொதுப்பேரேட்டில் இன்னும் காணப்படுகின்றது. | ஏற்றுக்கொள்கின்றேன். நல்லிணக்கத்திற்கு தேவையான விபரங்களைப் பெற்று நிலுவைகளை சரி செய்ததன் பின்னர் 2020 இறுதியில் பொதுப் பேரேடுகள் மூடப்படும். | குறிப்பிடப்பட்ட கணக்குகளை மூடுவது தொடர்பான செயல் முறைமை விரைவுபடுத்த பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (vi) | பேரேட்டு மீதிகளை சரி செய்யாமல் (SLFRS சரி செய்தல்) நேரடியாக நிதிக் கூற்றுக்களில் பதிவுகளை மேற்கொண்டிருந்தன. இத்தகைய தகவல்கள் வரிதாள்களில் (Spredsheets) பராமரிக்கப்படுகின்றன. இது தரவின் இழப்பு மற்றும் மாற்றியமைப்பதற்கு வழிவகுக்கும். எனவே இத்தகைய தரவுகளின் துல்லியத்தை உறுத்திப்படுத்த வலுவான செயல் முறையின் அவசியத்தை வங்கி மதிப்பீடு செய் வேண்டும். | கணினியிலிருந்து பூர்த்தி செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கைகளைப் பெறுவது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது. மேலும், எதிர்காலங்களில் தகவல்களின் துல்லியத்தையும் முழுமையையும் சரி பார்க்க நாங்கள் உறுதி செய்வோம். | தரவு பாதுகாப்பு மற்றும் துல்லியத்தை உறுதிப்படுத்த நிதி அறிக்கையிடலுக்கான கணினி தீர்வுக்கு நிறுவனம் செல்ல வேண்டும். |
| (viii) | நிறுவனத்தின் முழு நட்டக் கடன் ஏற்பாட்டு (impairment) கணிப்பு எக்ஸ்எல் (excel) தாள்களில் கைமுறையாக செய்யப்பட்டது. இது நட்டக் கடன் ஏற்பாட்டு மதிப்பீட்டில் குறிப்பிடதக்க (material) பிழைகள் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும். | நட்டக் கடன் ஏற்பாட்டின் முக்கிய நடைமுறை LGD கணிப்பீடு இது கணினியின் மூலமாக செய்யப்படுவதுடன் நிதிப்பிரிவானது வங்கியின் முழு கடன் இலாகா நிலுவையை எக்ஸ்எல் தாள்களுடன் உடன்படுகின்றதா என மறு பரிசீலனை செய்கின்றது. | நட்டக் கடன் ஏற்பாடு கணிப்பீட்டின் போது பயன்படுத்தப்படும் தரவுகளை மீள் பரிசீலனை செய்வது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்திற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (ix) | நிருவனத்தின் WHT நிலுவை ரூபா 1,311,828 ஐ சான்றிதழ் கிடைக்காதால் வருமானத்தில் சேர்க்கப்படவில்லை. | 2020 நிதியாண்டு முடிவடைவதற்கு முன்னர் அந்தந்த துறைகள் சான்றிதழ் சமர்பிக்க தவறும் நிலையில் நிலுவைத் தொகையைப் பதிவழிப்பதற்கு நிர்வாகத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட வேண்டும். எதிர்வரும் காலங்களில் நிதியாண்டுக்குள் அந்தந்த துறைகளிடமிருந்து சான்றிதழ்களை சேகரிக்க கடுமையான பின்தொடரல் மேற்கொள்ளப்படவுள்ளது. | WHT தொடர்பாக முறையான சான்றிதழ்களை பராமரிக்க நிர்வாகத்திற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

### 1.5.2 சமரசம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது பதிவுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 மார்ச் 31 இல் மேலதிக கொடுப்பனவு கணக்கில் ரூபா 4,470,035 அதிகமாக உள்ளது. இது தொடர்பில் கடன் மற்றும் குத்தகை இலாகா உடன் தொடர்புபடுத்தி வங்கியால் இணங்கான முடியவில்லை.<br><br>குறிப்பிடப்பட்ட மேலதிக கொடுப்பனவு தொடர்பில் வயதெல்லையை நிறுவனத்தால் வழங்க முடியவில்லை. | கடன் மேலதிக கொடுப்பனவு மீதி தொடர்பில் தனிநபர் கடன் வசதி வாரியான விபரம் கிடைக்க கூடியதாக உள்ளது.<br>கடன் வசதிகளை மூடுவதற்கு முன்னர் கிளை அதிகாரிகள் இம் மேலதிக கொடுப்பனவை அக் கடன் நிலுவைக்கு எதிராக மாற்ற தவறியுள்ளனர்.<br><br>எனவே இம் மேலதிக கொடுப்பனவு மீதியானது வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. | பொதுப்பேரேட்டு நிலுவைகள் தொடர்புடைய கடன் இலாகா நிலுவையுடன் சமரசம் செய்யப்படுவதை உறுதி செய்க. |
| (ii) | நிதி அறிக்கைகளின் படி CRIB இல் 540 பங்குகளை வங்கி வைத்திருந்தது. இருப்பினும் பங்கு சான்றிதழ் 100 பங்குகளை மட்டுமே வாங்கியதாகக் கூறுகின்றது. | 2020 டிசம்பருக்குள் இது தொடர்பாக பிரச்சினை தீர்க்கப்படும். பங்குகளின் சரியான எண்ணிக்கையை தீர்மானிக்க CRIB இல் இருந்து உறுதிப்படுத்தலை அழைக்கவும். | வங்கிக்கு செந்தமான பங்குகளின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்தவும். |

### 1.5.3 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கியில் ரூபா 2,867,968 மதிப்புள்ள வரவு நிலுவையையும் ரூபா 2,525,500 மதிப்புள்ள செலவு நிலுவைகளையும் சமரசம் செய்ய முடியவில்லை. மேலும் தொடர்புடைய நிலுவைகளுக்கு மூல ஆவணம் அல்லது துணை ஆவணங்கள் வழங்க முடியவில்லை. | 2020 ஜனவரி 30 இல் ரூபா 1,418,428 மீதி சரி செய்யப்பட்டதுடன் பிற நிலுவைகள் 2020 டிசம்பர் 31 க்கு முன்னர் சரி செய்யப்படும். | தொங்கல் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள நிலுவைகளை சரி செய்யவும் பதிவழிக்கவும் பரிந்துரைக்கப்படுகின்றது. |

### 1.5.4 பொருத்தமற்ற பெறுமதி மதிப்பீடு அல்லது பாதீடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிறுவனம் ரூபா 436 மில்லியன் பெறுமதியான இன்றும் பயன்பாட்டில் உள்ள சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களை முழுமையாக பெறுமான தேய்வு செய்திருந்தது. | கணினி அடிப்படையான PPE அமைப்பை உருவாக்கும் செயல்முறை 2020 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும். வளர்ச்சியுடன் எஞ்சிய மதிப்புக்கள் குறித்து வருடாந்த பெறுமதி | இன்னும் பயன்பாட்டில் உள்ள முழுமையாக மதிப்பிழந்த சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கையை மறு மதிப்பீடு செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தக்கூடிய நிபந்தனையின் அடிப்படையில் அந்த சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கையை மறு மதிப்பிடு செய்ய வங்கி தேவையான ஏற்பாடுகளை எடுக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்படும் மற்றும் தேவைப்பட்டால் சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கையை சரி செய்யவும். | |
| (ii) | நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு அதன் இறுதி மதிப்பீட்டிலிருந்து கனிசமான அளவு மாறவில்லை என்பது தொடர்பாக நிறுவனம் உறுதி செய்யவில்லை. | நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு கனிசமான அளவு மாறியுள்ளதா என்பதை சரிபார்க்க ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் நிறுவனம் முழு மதிபபீட்டைப் பெறுகின்றது. இருப்பினும் எதிர்காலத்தில் நிறுவனம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலமுடிவிலும் முடிவிலும் டெஸ்க் டொப் மதிப்பீட்டைப் பெற வுள்ளது. இது சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் ஆபாது குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருப்பதை இனம்கான உதவும். | நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பு அதன் இறுதி மதிப்பீட்டிலிருந்து கனிசமாக மாறவில்லை என்பதை உறுதி செய்ய மதிப்பீடுகள் மேற்கொள்ள நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

**1.5.5 ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாமை.**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சான் மைக்கேல் நிறுவனத்தின் 50,000 பங்குகளின் பங்குச் சான்றிதழ்களை நிர்வாகத்தால் பங்குதாரர்களுக்கு வழங்கமுடியவில்லை. | சான் மைக்கேல் லிமிடேட் நிறுவனத்தின் பங்குச் சான்றிதழகள் தற்போது நிறுவனத்தின் செயலாளர் பிரிவு மற்றும் கார்ப்பரேட் எட்வைசரி பிரிவில் இல்லை. பங்குதாரரின் நிலைமை உறுதிப்படுத்த இந்த விஷயம் மேலும் சரிபார்க்கப்பட்டது. இலங்கை ரூபா 500,000 புத்தக மீதி கணக்குகளில் பல ஆண்டுகளாக வந்துள்ளது. என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். | வங்கியில் உள்ள முக்கியமான ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதை உறுதி செய்யுங்கள். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 கொடுக்க வேண்டியவை.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடனாளிகளின் தற்காலிக கணக்குகள் அடையாளம் காணப்படாத நேரடி வைப்புத்தொகை, வழங்கப்படாத கொடுப்பனவுகள் மற்றும் திட்டமிடப்படாத கட்டண வசூல் கணக்குகளில் நீண்ட கால நிலுவைத் தொகைகள் காணப்பட்டன. நீண்டகால நிலுவைத் தொகையின் வயது பகுப்பாய்வு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம். தொடர்புடைய பிரிவுகளுடன் நல்லிணக்கம் நடந்து வருகின்றது. கூடுதலாக 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒரு கொள்கை உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். | தற்காலிக கணக்குகளில் நிலுவையில் உள்ள நிலுவைகளை அழிக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |

**விபரம்** **நிலுவைக் காலம் (ஆண்டுகள்)**

| விபரம் | 0-1 | 1-3 | 3-5 | 5 மேல் |
| --- | --- | --- | --- | --- |
| கடன்கொடுநர் | 2,757,977 | 3,385,165 | 3,575,125 | 101,876,139 |
| அடையாளம் தெரியாத நேரடி வைப்பு | 3,828,498 | 20,178,176 | 13,243,884 | 3,394,665 |
| வழங்கப்படாத கொடுப்பனவுகள் | 227,050 | 4,144,888 | 5,696,461 | 4,846,159 |
| திட்டமிடப்படாத கொடுப்பனவு சேகரிப்பு | 6,841,504 | 304,012 | - | 7,145,516 |
| மொத்தம் | 13,655,029 | 28,012,241 | 22,515,470 | 110,116,963 |

### 1.7 ஐரி (IT) பொதுக் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | கையொப்பம் மற்றும் வெலோசிடி அமைப்பில் மாற்று முகாமை மென்பொருளில் கைப்பற்றப்பட்ட | நிர்வகிக்கும் இயந்திர மாற்ற முகாமை தொகுதியை செயல்படுத்துவதன் மூலம் 2020 | தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளில் கடமைகளைப் பகிர்வை |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றம் முகாமை ஆவணத்தில் கடமைப் பகிர்வு மீறப்பட்டுள்ளது. | முதல் மாற்ற முகாமை அமைப்புக்கு ஒரு தரப்படுத்தப்பட்ட செயல் முறை | பராமரிக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (ii) | UAT ஐரி துறையின் ஊழியர்களால் நிகழ்த்தப்பட்டது. ஆனால் அந்தந்த வணிக பிரிவுகளால் கையொப்பம் மற்றும் வெலோசிடி அமைப்பினால் அல்ல. | ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (iii) | வெலோசிடி அமைப்பின் மாற்ற முகாமை ஆவணத்தில் “UAT நிகழ்த்தியது” தகவல் பிடிக்கப்படவில்லை. | | |
| (iv) | வெலோசிடி அமைப்பின் ஐடி முகாமையாளர் பயன்பாடு தரவுத்தளம் மற்றும் இயக்க முகாமை மட்டங்களில் வெலோசிடி அமைப்பின் நிர்வாகியாக செயல்படுகின்றார். வெலோசிடி அமைப்பின் மாற்ற முகாமை நடைமுறைக்கு பொறுப்பான முகாமையாளர் வெலோசிடி அமைப்பின் மேம்பாட்டுக் குழுவின் தலைவர், இது கடமைகளைப் பகிரும் கொள்கையை மீறுகின்றது. | இங்கு அக்கறை கொண்ட நபர் எம்.பி.எஸ்.எல் இன் மாற்ற முகாமை நடைமுறைக்கு பொறுப்பான நபர் அல்ல.<br><br>அதே நபர் பயன்பாட்டிற்கான பார்வை அனுகலை மட்டுமே கொண்டிருக்கிறார். இருப்பினும் தேவையான திருத்த நடவடிக்கை எம்.பி.எஸ்.எல். ஆல் எடுக்கப்படும். | தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளில் கடமைப்பகிரிவை பராமரிக்க பரிந்துரையாக்கப்படுகின்றது. |
| (v) | வெலோசிடி அமைப்பின் நேரடி சூழலுக்கு செய்யப்பட்ட முன்னேற்றங்களை கண்டறிய எந்த அமைப்பும் உருவாக்கப்படவில்லை. | கணினி உருவாக்கிய வளர்ச்சி பதிவைப் பெறுவதற்கு எம்.பி.எஸ்.எல். இல் செயல் படுத்தப்பட்ட ஒரு பயன்பாட்டு வாழ்க்கை சுழற்சி முகாமை தீர்வை நாம் கொண்டிருக்க வேண்டும். இது 2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளது.<br><br>இது போன்ற நேரம் வரை அபிவிருத்தி பதிலைப் பராமரிப்பதற்கான தற்போதைய கையேடு செயல் முறையை எம்.பி.எஸ்.எல் தொடரும். | நேரடி சூழலுக்கு செய்யப்பட்ட முன்னேற்றங்களை கண்காணிக்க ஒரு அமைப்பை உருவாக்கி மேம்பாட்டு பதிவைப் பெற பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (vi) | கடைசியாக 2014 ஆகஸ்ட் 14 அன்று திருத்தப்பட் காலாவதியான பேரழிவு மீட்பு திட்டத்தை நிறுவனம் பயன்படுத்திகிறது. | ஐடி துறைக்கான ISO: 27001 (ISMS) சான்றிதழுடன் இது புதுப்பிக்கப்படும். | வங்கியின் பேரழிவு மீட்பு திட்டத்தை மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (vii) | நிறுவனம் நிதியாண்டில் தற்போதுள்ள | ஒப்புக்கொள்கின்றோம். | நிறுவனத்தின் தற்போதைய |

| | | | |
|---|---|---|---|
| | வணிக தொடர்ச்சியான திட்டத்தை (பி.சி.டி) சோதிக்கவில்லை. | மற்றும் இலக்கு தேதி ஆகஸ்ட் 2021 ஆகும். | வணிக தொடர்ச்சியான திட்டத்தை சேகரிக்க பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (viii) | செயலில் உள்ள கோப்பகத்தால் வெலோசிடி அமைப்பில் ராஜினாமா செய்த ஊழியர்களுக்கான பயனர் கணக்குகளுக்கான சரியான நேரத்தில் செயழிலக்கப்படுவதை மதிப்பாய்வு செய்ய முடியவில்லை. | AD பயனர் கணக்கில் பயனர் சேர்க்கை முடிவடையும் திகதியை பிடிக்க வெலோசிடி அமைப்பு வடிவமைக்கப்படவில்லை. பயனர் செயழிலக்க தேதியை பராமரிக்க AD ஆனது உள்ளமைப்பு விருப்பத்தை வழங்கவில்லை. இருப்பினும் அனைத்து பயனர் உருவாக்கம் / பரிமாற்றம் / முடித்தல் தகவல்கள வெலோசிடி யுஎம்எஸ் (பயணர் முகாமை அமைப்பு) மூலம் கைப்பற்றப்படுகின்றது. | புயணர் சேர்க்கை முடிவடையும் திகதியை பிடிக்க வெலோசிட்டி அமைப்பில் தேவையான மாற்றங்களைச் செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது. |
| (ix) | ஒரு ஊழியர் வெலோசிடி அமைப்பில் இரண்டு பயணர் கணக்குகளுக்கு (பணியாளர் அடையாளத்தின் அடிப்படையில்) சேர்க்கப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது. | இந்த பதிவுகளில் ஒன்று தவறானது எனவே, தவறான பதிவு முடக்கப்பட்டு அதே பயனரை சரியான தகவலுடன் கணினியில் மீண்டும் சேர்த்தது, ஏனெனில் பயனர் சேர்க்கை தரவை நீக்க கணினி வசதி செய்யாது. | நகல்களைத் தவிர்ப்பதற்கு கணினியில் தேவையான மாற்றங்களைச் செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது. |

**2. நிதிப் பகுப்பாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இயக்க முடிவு ரூபா 57 மில்லியன் இலாபமாகவும் முந்தைய ஆண்டின் தொடர்புடைய இலாபம் ரூபா 447 மில்லியனாக இருந்தது. எனவே நிதி முடிவில் ரூபா 390 மில்லியனுக்கு அதிகமான சரிவு காணப்பட்டது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வட்டி செலவினம்; நட்டக்கடன் ஏற்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பிற இயக்க வருமானங்களின் ஏற்பட்ட குறைவுமே இவ் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாகும்.

**2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2019 | 2018 | மற்ற விகிதம் % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|---|

| | (ரூபா 000) | (ரூபா 000) | | |
|---|---|---|---|---|
| வட்டி மற்றும் ஒத்த செலவுகள் | 4,331,275 | 3,752,471 | 15.4 | வைப்புத் தொகை 2018 ஆம் ஆண்டில் 21 பில்லியனிலிருந்து 2019 இறுதிக்குள் 23 பில்லியன் அதிகரித்துள்ளது. இது 9 சதவீத வளர்ச்சி விகிதத்தைக் காட்டுகிறது. |
| ஏனைய இயக்க வருமானம் | 68,738 | 177,129 | 156.9 | ரியல் எஸ்டேட் விற்பனையின் இலாபம் மோசமான கடன்களை மீட்டெடுப்பது மற்றும் சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் விற்பனையின் இலாபம் (இழப்பு) முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் முறையே 4 சதவீதம், 33 சதவீதம் மற்றும் 992 சதவீதம் குறைந்துள்ளது. |
| கடன் மற்றும் பிற இழப்புக்களுக்கான குறைப்பாடு கட்டணங்கள். | 279,673 | 134,531 | 107.9 | முழு தொழில் துறையினதும் இதே போன்ற நிலையைப் பின்பற்றி முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயல்படாத கடன் விகிதம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 22 சதவீதமாக அதிகரித்துள்ளது. |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டிற்கான நிறுவனத்தின் சில முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | துறை விகிதம் * | நிறுவனம் 2019 (%) | 2018 (%) |
|---|---|---|---|
| **செயல்திறன் விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதன மீதான விகிதம் (ROE) | 10.6 | 4.0 | 6.3 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) | 1.0 | 0.28 | 0.57 |
| வட்டி அளவு | 3.6 | 6.52 | 7.83 |
| **சொத்துக்களின் தர விகிதம்** | | | |
| நிகர செயல்படாத முற்பணங்கள் | 4.6 | 7.93 | 6.51 |

**போதுமான மூலதன விகிதம்**

| சட்டரீதியான விகிதம் | குறைந்த தேவைப்பாடு | 2019 | 2018 |
|---|---|---|---|
| Tier 1 மூலதனம் | 6.5 | 5.6 | 5.42 |
| மொத்த மூலதனம் | 10.5 | 8.78 | 9.88 |

| | | | |
|---|---|---|---|
| திரவச் சொத்து விகிதம். | 20 | 12.30 | 10.20 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 அடையாளம் காணப்பட்ட இழப்புக்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இந் நிறுவனம் ரூபா 130 மில்லியனை செலான் குரூப் நிறுவனங்களின் வணிகக்காகிதத்தில் முதலீடு செய்துள்ளது. முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்கள் பின்னர் திவாலாகிவிட்டன, மொத்த முதலீட்டை ரூபா 435 மில்லியன் புத்தகங்களில் வங்கி தொடர்ந்து வைத்திருக்கின்றது. இந்த தொகை ஈடு செய்ய முடியாதென்பது. நிர்வாகம் உறுதியாக உள்ளது. இத் தொகைக்கு ஒரு ஏற்பாட்டை முன்பதிவு செய்துள்ளது. இருப்பினும், இந்த தொகை முன்னோக்கி கொண்டு செல்லப்படுகின்றது. | ஒப்புக்கொண்டேன் பதிவழிப்பதற்கு ஒரு சபைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2020 இறுதிக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது | தேவையான ஒப்புதல்களைப் பெற்ற பிறகு மீட்டெடுக்க முடியாத நிலுவைகளை எழுத பரிந்துரையாக்கப்படுகின்றது. |
| (ii) | 2019 ஆம் ஆண்டில் மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக இந் நிறுவனம் ரூபா 45,203,058 இழப்பை பதிவு செய்துள்ளது. மேலும், இதில் ரூபா 8,056,058 தொகை அறவீடு செய்யக் கூடியதாக இருந்தது நிறுவனம் நிதியாண்டில் இம் மோசடி வழக்குகளுடன் தொடர்புடைய 18 ஊழியர்களை பதவி நீக்கம் செய்தது. | எவ்வித வழக்குகளும் இல்லாது மீட்டெடுக்கக் கூடிய தொகைகளை மீட்டெடுக்கப்பட்டுள்ள ஏனையவை செயல்முறையிலுள்ளது. | மோசடிகளைத் தவிர்க்க நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடு செயல் முறையை வலுப்படுத்த பரிந்துரைக்கப்படுகின்றது. |

**3.2 திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்.**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 ஜனவரி 17 ஆம் திகதி ரூபா 165.8 மில்லியன் திட்ட செயலைக் கொண்ட ''கொட்டாவ ஹொர ஹேனா'' திட்டத்தை நிறுவனம் பூர்த்தி செய்துள்ளது. மேலும் 8 மாத கால தாமதம் நிறைவடைந்தது. | நாங்கள் நிலத்தை அபிவிருத்தி செய்யும் போது தொற்று நோய் சூழ்நிலை காரணமாக நாடு முழுவதுமான பூட்டப்பட்டிருந்தால் 2020 மார்ச் 19 முதல் 2020 ஜுலை நடுப்பகுதி வரை ஒட்டு மொத்த திட்ட நடவடிக்கையையும் நிறுத்த வேண்டியிருந்தது. கொரோனா காலத்தில் நாங்கள் விற்பனையைத் தொடங்கி அனைத்து தொகுதிகளையும் விற்று பட்ஜெட் லாபத்தை அடைந்தோம் (கடைசி தொகுதி 11.11.2020 அன்று விற்கப்பட்டது) | திட்டத்தை சரியான நேரத்தில் முடிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | ரூபா 138.3 மில்லியன் திட்ட செலவைக் கொண்ட ''மாடம் பெல்ல'' திட்டம் 2020 மார்ச் 17 அன்று நிறைவடைய இருந்த போதிலும் 2020 டிசம்பரிலும் முடிக்கப்படவில்லை. | 2020 பெப்ரவரி 26 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் அபிவிருத்தி பணிகளில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார் எனவே நாங்கள் கொள்முதல் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டியிருந்தது. மேலும் இரண்டாவது மிகக் குறைந்த ஒப்பந்தக்காரரை தேர்ந்தெடுத்தோம் நாங்கள் நிலத்தை அபிவிருத்தி செய்யும் போது தொற்று நோய் சூழ்நிலை காரணமாக நாடு முழுவதுமான<br><br>பூட்டப்பட்டிருந்தால் 2020 மார்ச் 19 முதல் 2020 மே 22 நடுப்பகுதி வரை ஒட்டு மொத்த திட்ட நடவடிக்கையையும் நிறுத்த வேண்டியிருந்தது.<br><br>2020 மே 22 இல் அபிவிருத்தியை மீண்டும் | திட்டத்தை சரியான நேரத்தில் முடிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | தொடங்கினோம் 2 ஆம் கொரோனா தொற்று அலை காரணமாக கம்பஹா மாவட்டம் மூடப்பட்டதால் 2020 ஒக்டோபர் 04 முதல் 2020 டிசம்பர் 10 வரை ஒட்டு மொத்த திட்ட நடவடிக்கைகள் நிறுத்த வேண்டியியிருந்தது. இறுதியில் முன்னேற்றங்களை முடித்தோம் நாங்கள் விற்பளையைத் தொடங்கினோம் இன்று வரை நாங்கள் 25% விற்பனையை அடைந்துள்ளோம். | |

**3.3 மனித வள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 டிசம்பர் 31 இல் வங்கியின் உண்மையான ஆளணி 1000 ஊழியர்கள், அங்காகீகரிக்கப்பட்ட ஆளணி 1338 பேர் எனவே 338 எண்ணிக்கையான காலியிடங்கள் இதி திகதியில் காணப்பட்டது. | அதற்கேற்ப ஆளணி விபரக் கோவையை அதிகரிக்க எதிர்கால வணிக வளர்ச்சியைமையமாகக் கொண்டு ஒப்புதல் பெறப்பட்டது. | நிறுவனத்தின் பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்களை நியமிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரைக்கின்றேன். |